www.padippakam.com

# சிறுவர் அமுதம்

ஐப்பசி 92

17.10.1992

கிண்ணம் 3

எண்ணம் 10

17/11/92




சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

KINDERFREUNDLICHES MAGAZIN

படிப்பகம்

www.padippakam.com



துன்பம் நெருங்கி வந்த போதும் நாம்
சோர்ந்து விடலாகாது பாப்பா!
அன்பு மிகுந்த தெய்வம் உண்டு - துன்பம்
அத்தனையும் போக்கி விடும் பாப்பா!

'' மகாகவி சுப்பிரமணிய பாரதியார்''

அன்புச் சிறுவர்களே,

சிறுவர் விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. பல இடங்களில் சிறுவர் விழா நடைபெறாது நிறுத்தப்பட்டதாக வதந்திகள் பரப்பப் பட்டதாக அறிய முடிகின்றது. இன்னும் சில இடங்களில் ஆட்களைப் போக வேண்டாம் என்று தடுத்ததாகவும் அறிய முடிகின்றது.

யார் எத்தகைய பொய்களைச் சொன்னாலும் மக்கள் நம்பத் தயாராக இல்லை என்பதை விழாக் காண வந்த சனத்திரள் காட்டியுள்ளது. சிறுவர் விழா தொடர்பாக ஒரு சிலர் மேற்கொண்ட பிரச்சாரங்கள் அவர்களின் நிலையை மக்களுக்குக் காட்டியுள்ளது. இந்த வகையில் சிறுவர் விழா முக்கியத்துவம் பெற்று விட்டது.

விழாவை முன்னிட்டு நடைபெற்ற பேச்சுப் போட்டி கதை சொல்லல் போட்டி என்பன அமைதியாக நிறைவாக நடைபெற்றுள்ளன. ஜேர்மனியின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் வருகை தந்து சிறப்பித்துள்ளனர். வழமையான விழாக்களைப் போலல்லாமல் புத்தகங்கள் பரிசு வழங்கப்பட்டமை எல்லோராலும் பாராட்டுப் பெற்றுள்ளதை இங்கே குறிப்பிட வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

சிறுவர் அமுதத்திற்குப் பெருகி வரும் ஆதரவானது சிறுவர் விழாவின் மூலம் உறுதி செய்யப் பட்டுள்ளதை இங்கே குறிப்பிட வேண்டும். நீங்களும் உங்கள் பெற்றோரும் காட்டி வரும் ஆதரவின் பலனாகச் சிறுவர் அமுதம் மாதம் இரு சஞ்சிகையாக மிக விரைவில் வெளி வரவிருக்கின்றது. தொடர்ந்து போட்டிகளில் பங்குபற்றி வருபவர்களுக்கும், ஆக்கங்கள் எழுதி அனுப்புகின்ற உங்களுக்கே மேலதிக சஞ்சிகை கிடைக்கும் என்பதை முன் கூட்டியே தெரிவித்துக் கொள்ளுகின்றேன். மேலதிக சஞ்சிகை மூலம் தினம் ஒரு கதையாகப் பல கதைகளை நீங்கள் படிக்கக் கூடியதாக இருக்கும்.

சிறுவர் விழா வீடியோ கசெற் (ஒளிஇழைப் பேழை) தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும். இந்த மாத இதழ் தாமதமாக வெளி வருவதால் போட்டி முடிவு திகதி 15.11.92 என்றுள்ளது, கவனிக்கவும்.

அன்புடன்
சின்ன இராஜேஸ்வரன்
ஆசிரியர்/ சிறுவர் அமுதம்.



படிப்பகம்

## ஜீயஸ் சிலை

# உலக அதிசயங்கள்

ஒலிம்பியா என்றதும் கிரேக்க நாடு எல்லோருக்கும் நினைவுக்கு வரும். ஒலிம்பியா மலை கிரேக்க நாட்டின் பழம் பெருமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது. கிரேக்கர் பெரும் பக்தியுடன் வணங்கிய தெய்வம் ஜீயஸ் தெய்வம். அந்த ஜீயஸ் தெய்வம் ஒலிம்பியா மலையில் இருப்பதாக அவர்கள் நம்பினார்கள்.

கிரேக்கர்கள் தமது ஜீயஸ் தெய்வத்தின் புகழை உலகம் முழுவதும் அறியச் செய்ய வேண்டும் என்று விரும்பினார்கள். அந்த ஜீயஸ் தெய்வம் வாழ்ந்ததாகக் கருதப்படும் ஒலிம்பியா மலையிலே பெரியதோர் ஆலயம் அமைக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஜீயஸ் தெய்வத்திற்குக் கோயில் கட்டினார்கள். அந்தக் கோயிலில் ஜீயஸ் தெய்வத்தின் உருவச்சிலையை அற்புதமாகப் படைப்பதாக முடிவு செய்தார்கள். பத்தாண்டு காலம் இடைவிடாத முயற்சியினால் பல்லாயிரம் அடிமைகளைக் கொண்டு கோயிலைக் கட்டி முடித்தார்கள். அந்தக் கோயிலுக்குள் வைப்பதற்குத் தெய்வத்தின் சிலையைச் செய்வதற்கு எந்தச் சிற்பியைத் தேர்ந்தெடுப்பது? என்று ஆராய்ந்தார்கள்.

www.padippakam.com

அந்தக் காலத்தில் பீடியாஸ் என்ற சிற்பியே திறமையும் புகழும் உள்ளவனாக இருந்தான். ஆனால் அந்த நேரம் அவன் ஏதன்ஸ் நகரில் வேறொரு சிலையை உருவாக்கிக் கொண்டிருந்தான். அந்தப் பணி முடிந்து பீடியாஸ் வரும் வரும் வரை அவனுக்காகக் காத்திருந்தனர். ஒரு வருடமல்ல! இரு வருடங்களல்ல! பத்து வருடங்கள் அந்தச் சிற்பிக்காக ஒலிம்பியா மக்கள் காத்திருந்தனர். ஏதன்ஸ் நகரத்துப் பணியை முடித்து வந்த பீடியாஸிடம் ஜீயஸ் தேவனை உருவாக்கும் பணி கொடுக்கப்பட்டது.

பீடியாஸின் கற்பனையில் அற்புதமான சிலை ஒன்று உருவாயிற்று. தேவனின் உடல்




படிப்பகம்

தந்தத்தினாலும் உடைவாள் தங்கத்தினாலும் சிலை உருவானது. வலது கையில் சிறகுள்ள வெற்றித் தேவதையின் சிலை. தேவனின் இருக்கை நவரத்தினங்களால் செய்யப்பட்டது. தேவனின் இடது கையில் நவரத்தினங்கள் பதிக்கப்பட்ட தங்கச் செங்கோல் பொருத்தப் பட்டது. கால்களில் உள்ள தங்கப் பாதணிகளில் வைரங்கள் பதிக்கப்பட்டன.

அற்புதமான இருக்கையில் சிலையை அமைத்தனர். சாதாரண மனிதனின் தோற்றத்தைப் போல எட்டு மடங்கு பெரிதான சிலையும் அதன் அமைப்பும் எல்லோராலும் பாராட்டப்பட்டது. இந்தப் பணியை முழுமையாக முடித்ததும் பீடியாஸ், ஜீயஸ் தேவனை மனமுருகத் தியானித்தான். ''ஜீயஸ் தேவனே! என் படைப்பில் உங்களுக்கு மன நிறைவு இருப்பது உண்மையாயின் உங்களுடைய அங்கீகாரத்தை இடி முழக்கத்தின் மூலம் அறிவிப்பீர்கள்'' என்று வேண்டினான். அடுத்த கணமே வானம் குமுறி இடி முழக்கம் நிலத்தையே அதிர வைத்ததாம்.

இந்த ஜீயஸ் தேவனின் உருவம் அக் காலத்துக் கிரேக்க நாணயங்களில் பதிக்கப்பட்டது. ரோமர் இந்தத் தெய்வத்தை ஜூபிடர் என அழைத்தனர். இந்தச் சிலை தொடர்பாகக் கிரேக்க புராணத்தில் இப்படியும் ஒரு கதை இருக்கின்றது.






ரோமாபுரியை காலிகூலா என்ற பேரரசன் ஆண்டு வந்தான். அவன் ஒலிம்பியாவில் இருக்கும் ஜீயஸ் சிலையைப் பெயர்த்துக் கொண்டு வர ஆட்களை அனுப்பினான். அந்தச் சிலையிலுள்ள ஜீயஸ் தெய்வத்தின் தலையை எடுத்து விட்டுத் தனது தலையை வைக்க வேண்டும் என விரும்பினான்.

அந்தச் சிலையை ரோமாபுரியில் வைத்தால் தன்னை எல்லோரும் புகழுவார்கள் என நம்பினான். காலிகூலாவின் கட்டளையை ஏற்று வந்த காவலர்கள் ஒலிம்பியா மலையில் ஏறினார்கள். சிலையைப் பெயர்த்தெடுக்க முயன்றார்கள். அப்பொழுது பயங்கரமான சிரிப்பொலியுடன் வந்த காற்றுக் காவலர்களைத் தூக்கி வீசியது.

இத்தனை தெய்வீகத் தன்மை வாய்ந்த இந்தச் சிலை இன்று காணாமற் போய்விட்டது. இதற்கு யார் காரணம் என்பதற்கு வரலாற்றில் எதுவுமில்லை. இன்று ஒலிம்பியா மலையில் பெரிய தூண்கள் மட்டுமே நிற்கின்றன. சிலை என்னவாயிற்று என்று தெரியவில்லை.



# துணிவே துணை

வசிட்டர் ஒரு பெரும் முனிவர். அவர் பிரமரிசி என அழைக்கப்பட்டார். கௌசிகர் என்ற அரசர் அவரிடம் சென்றார். வசிட்டரிடம் காமதேனு என்னும் பசு இருந்தது. அதன் மூலம் வேண்டியதை எல்லாம் பெற்றுக் கொள்ள முடியும். காமதேனுவின் உதவியால் வசிட்டர் கௌசிகருக்கு விருந்தளித்தார்.

காமதேனுவின் மீது கௌசிகருக்கு ஆசை ஏற்பட்டது. அதைத் தனக்குத் தருமாறு வசிட்டரிடம் கேட்டார். அது வந்தால் அழைத்துச் செல்லலாம் என்று வசிட்டர் கூறினார். கௌசிகர் காமதேனுப் பசுவை அழைத்துச் செல்ல முயற்சித்தார். முடியவில்லை. ''நானும் தவம் செய்து பிரமரிசி ஆவேன், அப்போது காமதேனு தானே வரும் என்று சொல்லித் தவம்புரியச் சென்றார். கடுந்தவம் புரியத் தொடங்கினார்.

www.padippakam.com

இதை அறிந்த இந்திரன் முதலானோர் கௌசிகரின் தவத்தைக் கலைக்க முயன்றனர். ஆயினும் தனது இடை விடாத முயற்சியினால் கௌசிகர் தவ வலிமை பெற்றார். பிரமரிசி ஆனார். அவர் விரும்பிய காமதேனுவும் அவருக்குக் கிடைத்தது.

''துணிவுக்கு மேலான நல்ல துணை வேறில்லை''

*** உலகிலே பெரும் பணக்காரர் வாழும் நாடாக யப்பான் உள்ளது. உலகின் முதல் இருபது பணக்காரர் யப்பானிலே உள்ளனர்.

*** அமெரிக்காவின் நிலப்பரப்புடன் ஒப்பிடும் போது யப்பான் மூன்று சதவீதமுள்ளது. ஆனால் முழு அமெரிக்க நிலத்தின் விலையைப் போல இரண்டு மடங்கு விலைக்கும் மேலாக யப்பான் நிலத்தின் விலை உள்ளது.

உலகஅதிசயங்கள்

*** உலக அதிசயங்கள் என்று பல இருந்தாலும், ஆண்டிபார் என்ற கிரேக்க நாட்டவர் முறைப் படுத்திச் சொன்ன ஏழு அதிசயங்களே பொதுவாகச் சொல்லப்படுகின்றன. இவர் முறைப் படுத்திய பின்னரும் உலகில் அதிசயங்கள் பல நடந்த வண்ணமே இருக்கின்றன.



படிப்பகம்

# முல்லா கதைகள்



முல்லாவிற்குப் புகழ் இருக்கின்ற அளவிற்குப் பணம் இல்லை. இதைக் காட்டி முல்லாவின் மனைவி அடிக்கடி இழிவாகப் பேசி வந்தாள்.

இப்படியாக மனைவி பேசுகின்ற ஒவ்வொரு வேளையும் ''இதோ பார் எனக்கு எப்போது பணம் தர வேண்டும் என்பது அல்லாவிற்குத் தெரியும். நீ கூச்சல் போடுவதால் ஏதும் நடந்து விடாது'' என்று முல்லா தனது மனைவியிடம் சொல்லி வந்தார். வழமை போல அன்றும் ஒருநாள் மனைவி முல்லாவிடம் பணம் இல்லாததைப் பற்றி இழிவாகப் பேசினாள். அதைக் கேட்ட முல்லா ''அல்லாவே! என்னுடைய மனைவியின் வாயை அடைப்பதற்காவது எனக்கு நூறு பொற் காசுகளைத் தரக் கூடாதா?'' என்று சத்தம் போட்டுச் சொன்னார்.

முல்லாவின் வீட்டில் நடப்பதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த பக்கத்து வீட்டுக் காரன் முல்லாவிடம் கொஞ்சம் விளையாடலாம் என்று நினைத்தான். தன்னிடமிருந்த பணத்தில் நூறு பொற்காசுகளை எடுத்து முல்லாவின் வீட்டு யன்னலுக்குள் எறிந்தான். காசு விழுந்த சத்தத்தைக் கேட்ட முல்லாவின் மனைவி சந்தோசத்தில் அவற்றைப் பொறுக்கி எடுத்தாள்.

பொற்காசுகளைப் பொறுக்கி எடுத்த முல்லாவின் மனைவி அவசரம் அவசரமாகக் கடைக்குச் சென்றாள். முல்லாவின் மனைவி பொற் காசுகளை எடுத்துக் கொண்டு கடைக்குச் செல்வதைக் கண்ட பக்கத்து வீட்டுக்காரன் முல்லாவிடம் ஓடி வந்தான். முல்லா! முல்லா!! நான் விளையாட்டாக எறிந்த காசுகளை உன் மனைவி எடுத்துக் கொண்டு கடைக்குச் செல்கிறாள், அந்தக் காசுகளை என்னிடம் கொடுக்கச் சொல் என்று கத்தினான்.

பக்கத்து வீட்டுக்காரன் சொல்வது உண்மை என்று முல்லாவிற்குத் தெரிந்தது. தன்னுடன் விளையாடப் பொற்காசுகளை எறிந்த பக்கத்து வீட்டுக்காரனுடன் தானும் கொஞ்சம் விளையாடினால் என்னவென்று யோசித்தார். பக்கத்து வீட்டுக்காரனைப் பார்த்து ''நீ சொல்வதை என்னால் நம்ப முடியாது! எனக்கு அல்லா தான் அந்தப் பொற்காசுகளை எறிந்திருக்கின்றார், நீ ஏன் பொய் சொல்கிறாய்? நான் அல்லாவைக் கேட்டேன் அல்லா தந்திருக்கின்றார் என்றார்.



இதைக் கேட்டதும் பக்கத்து வீட்டுக்காரன் முல்லாவுடன் சத்தம் போட்டுக் கத்தினான். என்னுடைய பொற்காசுகளைத் தராவிட்டால் நீதி மன்றத்திற்குச் செல்வேன் என்று மிரட்டினான்.

நீதி மன்றத்திற்குச் செல்வேன் என்றதும் முல்லா ''அப்படியா? என்னால் நீதி மன்றத்திற்கு வர முடியாது என்னுடைய ஆடைகள் அழுக்காக இருக்கின்றன வேண்டுமாயின் உன்னுடைய ஆடைகளை எனக்கு இரவலாகத் தா அவற்றை அணிந்து கொண்டு நீதி மன்றம் வருகின்றேன்'' என்று முல்லா சொன்னார். எப்படியும் பொற்காசுகளைப் பெற்று விட வேண்டும் என்ற ஆவலில் முல்லாவிற்குத் தன்னுடைய ஆடைகளை அணியக் கொடுத்து நீதி மன்றத்திற்கு அழைத்துச் சென்றான்.

www.padippakam.com

நீதிமன்றம் சென்றதும் முல்லா நீதிபதியைப் பார்த்து ''ஐயா, எனது பக்கத்து வீட்டுக்காரருக்குச் சில நாட்களாக விசர் பிடித்து விட்டது, எதைக் கண்டாலும் தன்னுடையதென்று கத்துகின்றார். நீங்கள் வேண்டுமானால் நான் அணிந்திருக்கும் இந்த ஆடையைக் காட்டி இது யாருடையதென்று கேளுங்கள் அவர் தன்னுடையதென்று சொல்லுவார்'' என்று முல்லா சொன்னார். பக்கத்து வீட்டுக்காரன் நூறு பொற்காசுகளையும் இழந்து ஆடைகளையும் இழந்து விடுவேனோ என்று நினைத்து ''ஐயா இந்த ஆடைகள் என்னுடையவை'' என்று சொன்னான். நீதி மன்றத்தில் இருந்த எல்லோரும் சிரித்தனர். முல்லாவின் பக்கத்து வீட்டுக்காரனைப் பாதுகாப்பாக வைத்துச் சிகிச்சை அளிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

(இன்னும் வரும்)

## கிழமைகள்


செல்வி. ரேகா கேதீஸ்வரான்

ஞாயிறு பசளை இட்டேன்
திங்கள் தண்ணீர் விட்டேன்
செவ்வாய் மொட்டைத் தொட்டேன்
புதன் ஆசைப் பட்டேன்
வியாழன் மலரைக் கண்டேன்
வெள்ளி இன்பம் கொண்டேன்
சனிக் கிழமை முழுகி
தலைவன் கோவில் கழுவி
மல்லிகைப் பூவை எடுத்து
மாலையாகத் தொடுத்து
இறைவன் பாதம் வணங்கி
மனதில் இன்பம் கொண்டேன்.



படிப்பகம்

# கழுதையும் நாயும்



கழுதையும் நாயும்

ஓர் ஊரில் ஒரு சலவைத் தொழிலாளி இருந்தான். துணி முடைகளைச் சுமந்து செல்லக் கழுதையையும் வீட்டைக் காவல் செய்ய நாயையும் வளர்த்து வந்தான்.

தான் மட்டும் முதுகு வலிக்கப் பாரம் சுமப்பதும் நாய் ஒரு வேலையும் இல்லாமல் இருந்து சாப்பிடுவதும் கழுதைக்குப் பிடிக்கவில்லை. தன்னுடைய மன வேதனையைக் கழுதை ஒருநாள் நாயிடம் சொல்லியது. நண்பா, நானோ நாள் தோறும் முதுகு வலிக்கப் பாரம் சுமக்கின்றேன். எனக்குத்தான் எசமான் அடி போட்டுத் துன்புறுத்துகின்றார். என்னைப் போல நீயும் ஒரு வேலைக்காரன் தான். உனக்கு வேலை எதுவும் இல்லை, உன்னிடம் மிகவும் அன்பாக இருக்கின்றார், இது என்ன நியாயம்? என்று கழுதை நாயிடம் சொல்லிக் கேட்டது.

இதற்கு நான் என்ன செய்ய முடியும்? நீ பகல் முழுவதும் கடினமான வேலை செய்கின்றாய்

என்பது உண்மைதான். இரவில் நீ ஆறுதலாகப் படுத்து நித்திரை செய்கின்றாய். என்னுடைய வேலை அப்படியல்ல! இரவில் நித்திரை செய்யாமல் காவல் காக்கின்றேன். இதனால் எசமான் என்னில் அன்பாக இருக்கின்றார் என நினைக்கின்றேன் என்று நாய் சொன்னது.

இதென்ன பெரிய வேலையா? என்னாலும் திருடர் வந்தால் கத்த முடியும் என்னுடைய வேலையை நீ செய்து பார்! அதிலுள்ள துன்பம் தெரியும். இன்றைக்கு நான் காவல் காக்கின்றேன் நாளைக்கு நீ பாரம் சுமக்கின்றாயா? என்று கழுதை நாயிடம் கேட்டது. எனக்கு எந்த விதமான மறுப்பும் இல்லை என்று சொல்லி விட்டு நாய் படுத்துக் கொண்டது. இனிமேல் பாரம் சுமக்கிற வேலை இல்லை என்று கழுதை சந்தோசப்பட்டது.



நள்ளிரவு நேரம் திருடன் வந்தான். சலவைத் தொழிலாளியின் வீட்டுச் சுவர் மீது ஏறினான். திருடனைக் கழுதை கண்டது. நாய் சத்தம் போட்டுத்தானே எசமானை எழுப்புகின்றது? நானும் சத்தம் போட்டு எசமானை எழுப்ப வேண்டும் என்று எண்ணிய கழுதை கத்தத் தொடங்கியது. கழுதையின் கத்தலைக் கேட்டுச் சலவைத் தொழிலாளியின் தூக்கம் கலைந்தது. தனது தூக்கத்தைக் கெடுத்ததற்காகக் கழுதை மீது ஆத்திரம் கொண்டான்.

தனது ஆத்திரம் தீருமட்டும் கழுதையைப் போட்டு அடி அடியென்று அடித்தான். அடி வலி தாங்க முடியாமல் கழுதை நிலத்தில் விழுந்தது. அதன் பின்னர் சலவைத் தொழிலாளி படுக்கைக்குச் சென்றான். எசமான் சென்றதும் கழுதையைப் பார்த்து நாய் ''அவரவர் வேலையை அவர் தான் செய்ய வேண்டும். அடுத்தவர் வேலையில் தலையிட்டால் இப்படித்தான் நடக்கும்'' என்று சொன்னது.

*** உலகிலே மிகப் பழமையான பாராளுமன்றம் ஐஸ்லாந்து நாட்டுப் பாராளுமன்றம் ஆகும். இதன் வயது ஆயிரத்து எழுபது ஆகும்.

*** உலகிலே மிக உயரத்தில் அமைந்துள்ள நகரம் பொலிவியா நாட்டின் தலைநகரான பொகோட்டா ஆகும்.

செல்வன். ரவி (சுவிஸ்)

www.padippakam.com




சித்திக்கு உடம்பெல்லாம் நடுங்கியது. ''ஐயோ இந்தப் பாவி என்னைக் கொல்லப் பார்க்கின்றான்'' என்று கத்தினாள். ''ஆம் உன்னைக் கொல்லத்தான் போகின்றேன்'' என்று சிட்னியும் பதிலுக்குக் கத்தினான். கொல்லவா பார்க்கின்றாய்? உன் அப்பா வரட்டும் கேட்டுப் பார்ப்போம் என்று சித்தியும் கத்தி விட்டுத் தனது அறைக்குள் ஓடினாள். ஓடிய சித்தி கதவைத் திறக்கவேயில்லை.

அடுத்த நாள் சனிக்கிழமை. சார்லிக்கு அரை நாள் பாடசாலையாக இருந்தது. வீட்டுக்குப் போனால்.. தரையைக் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டிய வேலை காத்திருக்கும். போகாமல் என்ன செய்வது? போக வேண்டியதுதான். பாதி துயரமும் பாதி பயமுமாகச் சென்ற சார்லி வீடு பூட்டி இருந்ததைக் கண்டான். காலையில் தனது குழந்தையுடன் வெளியே சென்ற சித்தி இன்னும் வீடு திரும்பவில்லை என்பதை வேலைக்காரி மூலம் அறிந்து கொண்டான். சித்தி வரும் வரை வெளியே காத்து நின்றான். இந்த நேரத்தில் சார்லி கண்ட காட்சி ஒன்று அவனது மனதில் புதிய ஆவலை ஏற்படுத்தியது.



படிப்பகம்

கண் பார்வையில்லாத மனிதர் ஒருவர் ஆர்மோனிய வாத்தியத்தில் இசைத்த பாட்டைச் சார்லி கேட்டான். இவ்வளவு இனிமையாக என்னாலும் பாட வரமாட்டாதா? என்று தனக்குள் கேட்டுக் கொண்டான். இந்தப் பாட்டும் வாத்தியமும் சார்லியின் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டன. நீண்ட நேரம் பாடகனுடன் நின்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பினான். சார்லியும் வீடு செல்லச் சித்தியும் அப்பொழுதுதான் வீட்டிற்கு வந்திருந்தாள். வீட்டினுள்ளே நுழைந்த சார்லியைச் சித்தி பிடித்து இழுத்து வந்து ''என்னடா சொந்த வீடு போல நுழைகின்றாயே நாயே!'' என்று சார்லி மீது எரிந்து விழுந்தாள்.

''வெளியே போடா நாயே! உனக்கும் உன் அண்ணனுக்கும் இனிமேல் இங்கே இடமில்லை'' என்று வெளியே பிடித்துத் தள்ளினாள். இனியும் இங்கே இருப்பதில் பயனில்லை என்று எண்ணிய சார்லி வீட்டிற்கு வெளியே இருட்டில் நடக்கத் தொடங்கினான். சிறிது தூரந்தான் நடந்திருப்பான், இருட்டில் ஒரு உருவம் தள்ளாடித் தள்ளாடி வந்து கொண்டிருந்தது. அந்த உருவம் தந்தை என்று சார்லி தெரிந்து கொண்டான். தந்தையிடம் நடந்தவற்றைச் சுருக்கமாகச் சொன்னான். தந்தை சார்லியை அழைத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றார்.



அங்கு சார்ல்ஸையும் சார்லியையும் கண்ட சித்தி இவனை ஏன் கூட்டி வந்தாய்? இவனுக்காக நீ ஏதாவது கதைத்தால் நீயும் வெளியேற வேண்டி வரும் என்று சார்ஸ்ஸிடம் லூசி கோபமாகச் சொன்னாள். லூசியின் வார்த்தை சார்ல்ஸிற்குக் கோபத்தை உண்டாக்கியது. பக்கத்திலிருந்த தடி ஒன்றை எடுத்து லூசிக்கு எறிந்தார். தலையில் அடி பலமாக விழுவே லூசி மயங்கி விழுந்தாள். இந்தச் சம்பவங்களைப் பார்த்துக் கொண்டிருந்த சார்லி எப்படியோ நித்திரையாகி விட்டான்.

(இன்னும் வரும்)



www.padippakam.com

# சிறுவர்விழாப் போட்டி முடிவுகள்

சிறுவர் விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம் :

பேச்சுப் போட்டி (மேற்பிரிவு)
1-செல்வி.யாழரசி சந்திரபால் (டோற்முண்ட்)
2-செல்வி.ஜெயசுதா செல்வராஜா (போகும்)
3-செல்வன் வினிஷியாம் கிருஷ்ணகாந்தன்(யூச்சென்)

பேச்சுப் போட்டி (மத்தியபிரிவு)

1-செல்வி.ஜெய்பிரபா தியாகேஸ்வரன் (போகும்)
2- செல்வி.ரூபி செல்வராஜா (போகும்)
3- செல்வி அகல்யா சந்திரபால் (டோற்முண்ட்)

பேச்சுப் போட்டி (கீழ்ப்பிரிவு)
1-செல்வி.கிரிசாந்திபாலசுப்பிரமணியம் பிராங்போட்
2-செல்வி.நிஷா ஜெகதீசன் (போகும்)
2-செல்வன் ஜனகன் தியாகேஸ்வரன் (போகும்)
3-செல்வன் துஷ்யந்தன் செல்வராஜா (போகும்)

கதைசொல்லல் (கீழ்ப்பிரிவு)

1-செல்வி.சுஷானி சிவராஜா (செல்ம்)
2-செல்வி.சுபாஷினி அரிச்சந்திரன் (டியூஸ்பேர்க்)
3- செல்வி.லாவண்யா பாலேந்திரன் (மியபுஸ்)



படிப்பகம்

விநோத உடைப்போட்டி

1-செல்வி.சிந்துஜா கிருபாகரன் (பிராங்போட்)
2-செல்வன்.சமரன் விக்னேஸ்வரன் (ஒல்ஸ்பேர்க்)
3-செல்வி.ரூபி செல்வராஜா (போகும்)
3-செல்வி.ஜெய்பிரபா தியாகேஸ்வரன் (போகும்)

பேச்சுப் போட்டிகளில் முதலாம் இடம் பெற்றவர்களுக்குப் ''பணி'' சஞ்சிகையாளர் வெள்ளிக் கிண்ணம் வழங்கிப் பாராட்டியுள்ளனர். வெற்றியீட்டிய அனைவருக்கும் தமிழகத்தில் மாதம் இரு சஞ்சிகையாக வெளிவரும் ''பூந்தளிர்'' சஞ்சிகையும் ஒரு வருடத்திற்குக் கிடைக்கின்றது.

**** கல்வித் தரத்தில் அதி சிறந்ததாக உலகிலுள்ள பாடசாலைகள் சிலவற்றை'' யுனேஸ்கோ'' நிறுவனம் தெரிவு செய்துள்ளது.
பிழையின்றிப் படித்தல் : நியூசிலாந்து
குழந்தைப் பருவத்தில் கல்வி : இத்தாலி
கணிதக் கல்வி : நெதர்லாந்து
விஞ்ஞானம் : யப்பான்
பன்மொழிகளிலும் கல்வியறிவு : நெதர்லாந்து
கலை/இலக்கியம் : அமெரிக்கா( U.S.A.)
பிரான்ஸ்
உயர் நிலைப் பள்ளிகளின் கல்வித் தரம் : ஜெர்மனி
ஆசிரியர் பயிற்சி : ஜெர்மனி
மேல் நிலைக்கல்வி : அமெரிக்கா (U.S.A.)
முதியோர் கல்வி : சுவீடன்

ரவி (சுவிஸ்)

www.padippakam.com

# அப்பாவும் மகளும்





மகள் : அப்பா, நாங்கள் ஏன் தீபாவளியைக் கொண்டாடு கின்றோம்? இது சமயக் கொண்டாடடமா?

அப்பா : தீபாவளி இந்துக்களின் தலையாய பண்டிகையாக உள்ளது. இந்தப் பண்டிகையை ஏழை பணக்காரர் என்ற பாகுபாடின்றி எல்லோரும் கொண்டாடுகின்றனர். தீபாவளி என்றால் தீபங்களின் வரிசை என்று பொருள். தீபாவளி நாளில் வீடுகள் எல்லாம் தீப வரிசையால் அலங்கரிக்கப் பட்டிருக்கும். இது இடத்திற்கிடம் மக்களுக்கு மக்கள் வித்தியாசமாகக் கொண்டாட்டப் படுகின்ற பண்டிகையாக உள்ளது.

இந்தப் பண்டிகை நாகாசுரன் என்ற அரக்கனைக் கண்ணன் கொன்ற நாள் என்று இந்துக்கள் நம்புகின்றனர். இது தொடர்பான கதையும் புராணத்தில் இருக்கின்றது. நாகாசுரன் என்ற அரக்கன் தேவர்களைத் துன்புறுத்தி வந்தான். தேவர்களின் தலைவனான இந்திரன் கண்ணனிடம் சென்று முறையிட்டான். கண்ணன் தனது மனைவி சத்தியபாமாவுடன் நாகாசுரனை அழிக்கச் சென்றார். சத்தியபாமா சக்தியின் அவதாரமாகச் செயற்பட்டாள் என்பது குறிப்பிடத் தக்கது.



படிப்பகம்



தீயவனான நாகாசுரன் கண்ணன் சத்தியபாமாவினால் அழிக்கப்பட்ட நாளை மக்கள் மகிழ்ச்சியாகக் கொண்டாடுவதே தீபாவளி என்று சொல்லப்படுகின்றது. அக்கிரமம், அநீதி, துன்பம் இவை அழிக்கப் பட்டால் மக்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள் என்பதற்கு இந்தப் பண்டிகை உதாரணமாக இருக்கின்றதல்லவா?

இந்தத் திருநாளில் எண்ணெய் தேய்த்து முழுகுதல் முக்கியமானதாகும். எண்ணெயை இலக்குமி என்றும் தண்ணீரைக் கங்கை என்றும் சொல்லும் இந்துக்கள் இதன் மூலம் இரண்டும் தமது வீட்டில் சங்கமமாவதாக நம்புகின்றனர்.

www.padippakam.com

முழுகிப் புத்தாடை அணிந்து பெரியவரை வணங்குதலும் அவர்களிடம் ஆசி பெறுதலும் முக்கியமானதாகும். அயலிலுள்ள உறவினர் நண்பர்கள் அயலவரோடு கூடி மகிழ்ந்து உண்பது இந்நாளின் இன்னொரு விசேசமாகும்.

இந்தத் தீபாவளித் திருநாளை வங்கத்தில் அன்னை பவானியின் திருநாளாகவும், மகாராஷ்ரத்தில் தாம்பூலத் திருநாளாகவும் குஜராத்தில் குபேர பூசையாகவும் புதுக் கணக்குத் தொடங்கும் புத்தாண்டாகவும் கொண்டாடப்படுகின்றது.

இந்தத் திருநாளை இந்தியாவில் பலவிதமாகக் கொண்டாடுகின்றனர். தமிழகத்தில், கல்யாணமான புதுத் தம்பதிகளுக்குத் தலைத் தீபாவளி என்று சொல்வார்கள். மாப்பிள்ளையைக் கோலமிட்ட மணையில் உட்கார வைத்து மாமியார் எண்ணெய் தேய்த்து க் 'கௌரீ கல்யாணமே வைபோகமே'' என்று பாடும் வழக்கம் தமிழ் நாட்டிலுள்ளது. பட்டாசைக் கொளுத்துவதனால் இதனைத் தமது சீவனத் தொழிலாகக் கொண்டுள்ள பல ஏழைக் குடும்பங்களும் பிழைக்க வழி ஏற்படுகின்றது.

இத் திருநாளை இன்று இந்துக்கள் மட்டுமின்றி ஏனைய பல மத்தவர்களும் கொண்டாடத் தொடங்கி யுள்ளனர். தீபாவளித் தினம் தொடங்கும் தீப அலங்காரம் கார்த்திகைப் பண்டிகை வரை நீடிக்கின்றது. நமது நாட்டில் தீபாவளி ஒரு விசேசமான திருநாளாக இருந்து வந்துள்ளது. தற்போதைய யுத்தங் காரணமாக மிக நீண்டகாலமாக இத் திருநாள் கொண்டாடப் படவில்லை.



படிப்பகம்

நமது நாட்டில் யுத்தம் என்ற அரக்கனினால் மக்கள் துன்பப்படுகின்றனர். இந்த யுத்த அரக்கன் மறையும் நாள் எமது நாட்டு மக்களுக்கு ஒரு நாளல்ல எல்லா நாளும் தீபாவளியாக இருக்கும் அல்லவா?

தீபாவளித் திருநாளில் புத்தாடை உடுத்தி உற்றார் உறவினரோடு கூடிக் குலவி உண்பது ஒரு மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியாகும்.

## தமிழ் படி

ஓர் ஊரில் தமிழ்ப் புலவர் ஒருவர் இருந்தார். அவர் ஏழையாக இருந்தார். அவரிடம் சில மாணவர்கள் தமிழ் படித்து வந்தனர். அதில் வரும் வருவாயைக் கொண்டே தனது வாழ்க்கையை நடாத்தி வந்தார்.

புலவரின் நாட்டைக் கல்வி கேள்வி அறிவே இல்லாத அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அரசன் தனது அமைச்சர் தளபதி காவலர்கள் எல்லோரையும் கல்வி அறிவற்றவர்களாகவே தேர்ந்தெடுத்தான். நாட்டின் ஆட்சியின் நிலையால் கற்றவர்கள் பயந்து பதுங்கி ஒதுங்கி வாழத் தொடங்கினர்.



புலவர் ஒருநாள் தமது மாணவர்களிடம் தமிழ் படி என்று சொன்னார். இதை இரண்டு காவலர்கள் கேட்டு விட்டனர். என்னடா இந்தக் கிழவன் தமிழைப் படி என்று குறைத்துச் சொல்கிறானே! தமிழை உயர்வாக வாசல் என்று ஏன் சொல்லக் கூடாது? இந்தக் கிழவன் தமிழை இழிவுபடுத்தி விட்டதாக இழுத்துச் சென்று சிறையில் அடைத்துச் சித்திரவதை செய்ய வேண்டும் என்று மற்றவனிடம் சொன்னான். மற்றவனும் தமிழைப் படி என்றது பெருங் குற்றமே! இழுத்துச் செல்வோம் கிழவனை என்று சொல்லி இழுத்துச் சென்றனர்.

அரசன் எந்த நேரமும் வியாபாரத்தைப் பற்றியும் எப்படிச் சம்பாதிக்கலாம் என்ற எண்ணத்திலே இருந்தான். யாரோ ஒரு வியாபாரி வைரக் கல் கொண்டு வந்திருந்தான். இந்த வைரக் கல்லை எப்படிக் குறைந்த விலையில் அபகரிக்கலாம் என்ற எண்ணத்திலே நாள் முழுவதும் யோசனையில் இருந்தான்.

காவலர்கள் புலவரை இழுத்து வந்து அரசன் முன் நிறுத்தினர். அரசே இந்தக் கிழவன் தமிழைப் படி என்று சொல்லி விட்டான். இவனுக்குத் தகுந்த

தண்டனை வழங்குங்கள் என்று சொன்னார்கள். என்ன புலவரே எப்படியான படி வைத்திருக்கின்றீர்? படியை மட்டும் வைத்திருந்தால் பொருளை எப்படி நிறுப்பீர்? படியைத் தனியே வைத்திருப்பது பெருங் குற்றம்! தராசு வைத்திருப்பவர் மட்டுமே படி வைத்திருக்கலாம். நீர் ஏதோ கள்ள வியாபாரம் செய்கின்றீர் உமக்குக் கடுங் காவல் தண்டனை விதிக்கின்றேன் என்று சொன்னான்.

காவலர்களுக்கு அங்கு நடந்தவை புரியவில்லை. ஆனாலும் புலவருக்குத் தண்டனை கிடைத்து விட்ட மகிழ்ச்சியில் அவரை இழுத்துக் கொண்டு சிறைக்குச் சென்றார்கள்.

## பைத்தியக்காரர்கள்

*** பைத்தியக்கார வைத்தியசாலையைப் பார்வையிட ஒரு பத்திரிகையாளர் வந்தார். அங்கு நூறு பைத்தியக்காரர்களும் அவர்களை மேற் பார்வை செய்ய மூன்று காவலர்களும் இருந்தார்கள். இதைக் கண்ட பத்திரிகையாளருக்குப் பெரும் ஆச்சரியமாக இருந்தது. தனது ஆச்சரியத்தை வைத்தியரிடம் தெரிவித்தார். ''இந்தப் பைத்தியங்கள் நூறு பேரும் சேர்ந்து மூன்று காவலாளிகளையும் கட்டிப் போட்டு விட்டுத் தப்பி விடலாம் அல்லவா?'' என்று கேட்டார். அதற்கு அந்த வைத்தியர் "பைத்தியங்கள் என்றுமே ஒன்று சேர மாட்டார்கள்" என்று பதில் சொன்னார்.



# ஐன்ஸ்டைன்

இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த விஞ்ஞானியாக மதிக்கப்படுபவர் என்றால், அது ஐன்ஸ்டைன் என்பதில் சந்தேகமில்லை. ஜேர்மனியராகப் பிறந்த போதிலும் சுவிற்சர்லாந்து அமெரிக்கா நாடுகளின் குடி மகனாக மாறியவர்.

இவர் தமது 15-ஆவது வயதிலே சுவிஸ் நாட்டின் குடிமகனாக மாறினார். இவர் ஒரு கணித மேதை ஆவார். 1914-ஆம் ஆண்டில் பெர்லின் பல்கலைக் கழகம் இவரைப் பேராசிரியராக அழைத்தது. இதை ஏற்றுக் கொண்டு பெர்லின் வந்தார். தன்னை ஜேர்மன் குடிமகனாக மாற்றிக் கொண்டார்.

இவர் யுத இனத்தவராவார். இதனால் கிட்லரின் ஆட்சியின் போது இவர் ஜேர்மனியை விட்டு வெளியேற வேண்டியதாகி விட்டது. அமெரிக்காவிற்குச் சென்று அந்த நாட்டின் குடி மகனாக மாறினார். 1905-ஆம் ஆண்டில் இவர் வெளியிட்ட சார்புக் கொள்கை இவரது புகழை உலகம் அறியச் செய்தது. 1921-ஆம் ஆண்டு நோபல் பரிசைப் பெற்றுக் கொண்டார். இவர் இரு முறை திருமணம் செய்து கொண்டார்.



இன்றைக்கு உலகை நடுங்க வைக்கின்ற அணுக் குண்டைத் தயாரிக்க இவரது சார்புக் கொள்கையே வழி வகுத்தது. அணுக் குண்டினால் ஏற்படும் பேரழிவைக் கண்டு தமது வாழ்வின் இறுதி நாட்களில் போரை எதிர்த்துப் பேசியும் எழுதியும் வந்தார்.

நன்றாக வயலின் வாசிக்கத் தெரிந்த இவர் ஒரு ஞாபக மறதிக்காரர். மற்றைய விஞ்ஞானிகளைப் போல ஆராய்ச்சிக் கூடங்களில் இவர் தமது ஆராய்ச்சிகளைச் செய்ய வில்லை. காகிதமும் பென்சிலும் கிடைத்து விட்டால் போதும் அதிலேயே தனது ஆராய்ச்சிகளைத் தொடங்கி விடுவார். கணக்குகளைப் போட்டே பல புதிய உண்மைகளைக் கண்டு பிடித்தார். நட்சத்திரங்களிலிருந்து வரும் ஒளிக் கதிர்கள் சூரியனுக்கு அருகாமையில் வரும் போது வளைகின்றன என்பதைக் கண்டு பிடித்துச் சொன்னார். பின்னரே இதை மற்றவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

பொருளை ஆற்றலாக மாற்ற முடியும், ஆற்றலைப் பொருளாக மாற்ற முடியும் என்ற இவரது இவரது கொள்கை விஞ்ஞானத்தில் பல கண்டு பிடிப்புக்களுக்கு உதவியது. உலகத்தில் ஒளியின் வேகத்தைத் தவிர மற்ற எல்லாமே மாறும் தன்மை கொண்டவை என்பதும் இவரது கொள்கை ஆகும்.

இளமையில் யாருடனும் கதைப்பதற்கு வெட்கப் பட்டு ஓடி ஒதுங்கும் இவர் முதுமையில் கலகலப்பாகப் பேசி எல்லோரையும் சிரிக்க வைக்கும் தன்மை கொண்டவராக விளங்கினார். இளமையில் கணித பாடத்தில் எதுவுமே தெரியாமல் இருந்தவர். பின்னாளில் கணித மேதையாகிக் கணிதத் துறையில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தார்.

முதல் மனைவியிடம் விவாகரத்துப் பெற்ற இவர் எல்சா என்ற கைம் பெண்ணை இரண்டாந் தாரமாக மணந்து கொண்டார். ஜேர்மனியர் முதலாவது உலகப் போரில் தமக்கு ஏற்பட்ட தோல்விகளுக்கு யூதரே காரணமென்று சொல்லி யூத எதிர்ப்புப் பிரச்சாரத்தைத் தொடங்கினர். இதனால் மிகவும் மனம் நொந்த நிலையில் அமெரிக்காவிற்குச் சென்றார்.

சமயத் துறையில் ஐன்ஸ்டீனுக்கு மிகுந்த ஈடுபாடிருந்தது. சமய உணர்வு அவசியமானது என்று எழுதியும் வாழ்ந்தும் காட்டினார். சமயத்திற்கு அடிமையாகாமல் சமய உணர்வு இருந்தாலே போதும் என்று வற்புறுத்தினார். ''அறிவியல் இல்லாத சமயம் குருட்டுத் தனமானது என்றும், சமயம் இல்லாத அறிவியல் நொண்டியானது'' என்றும் கூறி வந்தார்.

1948-ஆம் ஆண்டில் யூதர்களுக்கு இஸ்ரவேல் நாடு உருவாக்கப்பட்ட போது அதன் குடியரசுத் தலைவராக இருக்குமாறு விடுத்த அழைப்பை நிராகரித்தார். 1879-ல் பிறந்த இவர் 1955-ல் இறந்தார்.


# சிறுவர் விழா

அமுதமே நீ படைத்த - சிறுவர்
விழாக் கண்டு சிறுவன் நான்
மகிழ்வுற்றேன் மட்டற்று!
திரள் திரளாய்த் திரண்டு வந்த
மக்கள் வெள்ளங் கண்டு - ஆனந்தம்
நான் கொண்டேன் - சிறுவர்
விழாவதனில் நான் பங்குபற்றச் - சிறு
சந்தர்ப்பம் எனக்களித்தாய்! - தமிழ்ப்
பால் தனைப் பருகிப் பரவசமாகிச்
சந்தோசம் நான் பெற்றேன் - இன்னும்
பல விழாக்களை நீயும் படைத்திட
எங்களுக்கும் ஊக்கம் அளித்திடுவாய்!
அமுதமே உன் சேவைதனை இன்னும்
அமுதமாய் படைத்திடுவாய்!
வாழ்க நீ என்று, சிறுவன் நான்
வாழ்த்துகின்றேன் உன்னையே!

சிவகுமார் சிவசுப்பிரமணியம்

www.padippakam.com

# குறுக்கெழுத்துப் போட்டி 4



## வினாவிடைப் போட்டி முடிவுகள் (புரட்டாதி)

1) அடுத்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் ஐக்கிய அமெரிக்காவின் ஜோர்ஜியா மாநிலத்தின் அற்லான்ரா (ATLANTA) நகரில் நடை பெறவுள்ளது. கடந்த இதழில் தவறுதலாக இந்தப் பெயர் அல்ரான என்று குறிப்பிடப் பட்டு விட்டது.

2) இலங்கையின் மிக நீளமான நதியின் பெயர் மகாவலி கங்கை ஆகும். இது திருகோணமலை அருகே கொட்டியாரம் என்னுமிடத்தில் வங்காள விரிகுடாக் கடலினுள் சேருகின்றது.

3) விபுலானந்த அடிகள். இவரை மக்கள் அடிகளால் என மதிப்புடன் அழைத்தனர்.

www.padippakam.com

4) ஜேர்மனியின் வட எல்லையா டென்மார்க் நாடுள்ளது. இதன் தலைநகரம் கொப்பன்காபன்.

5) வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கொய்யாப் பழம், மாதுளம்பழம், திராட்சைப் பழம், தோடம்பழம், இன்னும் பல

சரியான விடைகளை வழமையைவிட அதிகமானோர் எழுதியிருந்தனர். அவர்கள் எல்லோருக்கும் எமது பாராட்டுக்கள்.

அதிஸ்டசாலிகளாத் தெரிவு செய்யப் பட்டவர்கள்.

செல்வி. ஜெகதா தர்மராஜா
செல்வி. மைதிலி மாசிலா
செல்வி. சுதர்சினி சந்திரதாஸ்
செல்வி. செல்வா கந்தவனம்
செல்வி. தயாநிதி திருச்செல்வம்
செல்வன் பிரசன்னா புஸ்பராஜா
செல்வி. நிலானி வனிதராஜன்
செல்வன். விதுனன் பிரதாபராஜா
செல்வி. ஜெயதீபா இரத்தினசபாபதி
செல்வன். சிவகுமார் சிவசுப்பிரமணியம்
செல்வி. சுஜாதா பாலச்சந்திரன்
செல்வி. பாமினி தனபாலசிங்கம்
செல்வன். ரஜீவா சிவசுப்பிரமணியம்
செல்வன் சமரன் விக்னேஸ்வரன்
செல்வி. அகல்யா சந்திரபால்
செல்வி. சர்மி சர்வானந்தா
செல்வன் ஜனார்த்தன் குலம்
செல்வன். தரணிகரன் மனோகரன்
செல்வன். சிவரூபன் செல்வராஜா
செல்வி. சிவதர்சினி சிவராஜா

இவர்களில் முதலாவதாக இருக்கும் முதல் மூவருக்கும் ஒவ்வொரு புத்தகங்கள் பரிசாகக் கிடைக்கின்றன.

## கண்டுபிடியுங்கள்

கண்டுபிடியுங்கள் என்றொரு போட்டி தொடர்ந்து வெளி வரவுள்ளது. சதுரங்களுக்குள் எழுத்துகள் ஒழுங்கின்றி இருப்பது போல இருக்கின்றன. இடமிருந்து வலமாக, வலமிருந்து இடமாக, மேலிருந்து கீழாக, கீழிருந்து மேலாக இந்த எழுத்துகளைக் கொண்டு சொற்களைக் கண்டு பிடித்து விடலாம்.

சாய்வு கோணமான நேர் ஒழுங்கிலும் சொற்களைக் கண்டு பிடிக்கலாம். எந்தச் சொல்லும் குழம்பியோ அல்லது திரும்பி வளைகின்ற ஒழுங்கிலும் இல்லை. அவ்வாறு எந்தச் சொல்லையும் எழுதக் கூடாது. மிகக் கூடுதலான சொற்களைக் கண்டு பிடித்து எழுதுபவருக்குப் பரிசாகப் புத்தகம் வழங்கப்படும்.

இந்தச் சதுரத்தை அப்படியே வரைந்து அல்லது போட்டஸ்ரட் பிரதி எடுத்தோ விடைகளைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பலாம். எழுத்துகள் உள்ள கூட்டில் உதாரணம் காட்டப் பட்டுள்ளது. அதே போல நீங்களும் ஏனைய சொற்களைக் கண்டு பிடித்து அனுப்பவும். இந்த மாதம் இடம் பெற்றுள்ள எல்லாப் போட்டிகளின் முடிவு திகதியும் 15.11.92 ஆகும்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கோ | ள் | னை | ம் | ல | கா | க் | ரா | இ |
| ம | எ | த | ய் | தா | ர் | கூ | னி | ல |
| க | ப | ந் | தி | ய | யா | மை | இ | ங் |
| ள் | த | சி | தை | க | தி | க | தி | கை |
| உ | ட | ந் | தை | ம் | ர | ம | அ | தி |
| ஏ | த | தை | ய | ல் | பா | யா | ச | ம் |
| க | டை | வி | ம் | ண | ணி | ர | ரா | ய |
| ன் | வ | ன | ம் | ம | கே | கா | ம் | பு |
| னி | ன் | ய | வி | கி | ங் | ச | ர | ல |
| க | னி | லு | ப | ச | அ | ம் | க | ம் |

கோமகள், தந்தையர், தடை, தையல் என்ற சொற்கள் உதாரணமாகச் செய்து காட்டப்பட்டுள்ளன. ஒரு சொல்லுக்குப் பயன்படுத்தும் எழுத்தை இன்னொரு சொல்லுக்கும் பயன்படுத்தலாம். எங்கே கண்டு பிடித்து அனுப்புங்கள் பார்க்கலாம்.

முடிவு திகதி : 15.11.1992 ஆகும்

www.padippakam.com

அதிஸ்ட்சாலிகள் மூவர்

செல்வி. ஜெகதா தர்மராஜா
(நல்வழிச் சிறுகதைகள்)

செல்வி. மைதிலி மாசிலா
(சின்னக் கண்ணன் பிறக்கின்றான்)

செல்வி. சுதர்சினி சந்திரதாஸ்
(திருமால் பெருமைக் கதைகள்)

# குறுக்கெழுத்துப் போட்டி 5

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |



படிப்பகம்

# குறுக்கெழுத்து போட்டி (5)

அடைக்கப்பட்டுள்ள எண்கள் : 5,6,11,14,16,22,25,28, 31,33, 35,37,39,47,48

இடமிருந்து வலமாக வரும் சொற்கள் :

1) அழகு,வடிவு, என்பது போன்ற ஒத்த கருத்துள்ள சொல்.

8) இதில் பிரயாணம் செய்யலாம். இங்கு இது வலமிருந்து இடமாக மாறி உள்ளது.

12) பெண்ணைக் குறிக்கும் இச் சொல், பொம்மையையும் குறிக்கும்.

17 இது படிப்பதற்கு உதவும். ஒவ்வொரு வீட்டிலும் இவை இருக்கும். (இங்கு இது குழம்பியுள்ளது.)

23) உருவாக்குதல் செய்தல்,அணிந்து கொள்ளுதல், என்ற கருத்துள்ள சொல். பெயரைத் தெரிவிக்காமல் இந்தப் பெயரில் ஆக்கங்கள் எழுதுவோரும் உண்டு. இப்படி உரைப்பதில் பலருக்கு விருப்பம் உள்ளது. (வலமிருந்து இடமாக மாறியுள்ளது.)

26) பலவந்தமாக ஒன்றை ஏற்றுக் கொள்ளவைப்பதை இப்படிச் சொல்லலாம். தமிழ் மக்கள் மீது சிங்கள அரசுகள் பல சட்டங்களை இப்படியே ஏற்க வைத்தன. (இந்தச் சொல் வலமிருந்து இடமாக உள்ளது.)

www.padippakam.com

29) இது எல்லோருக்கும் சமமாக இருக்க வேண்டும். இது தனது நிலையிலிருந்து மாறி விட்டால் நாட்டில் குழப்பம் ஏற்படும்.

40) பூ,இலை என்பவற்றிற்கு இது இருக்கும். கைப்பிடியையும இப்படிச் சொல்லுவர். மூங்கில்,பூசனியையும் இந்தச் சொல் குறிக்கும்.

43) இறந்தவர்களை இறுதியாக இப்படிச் செய்வது வழக்கம். நமது நாட்டில் உயிருடனே இப்படிச் செய்தார்கள்.(இந்தச் சொல் குழம்பியுள்ளது.)

மேலிருந்து கீழாக வரும் சொற்கள் :

---

1) இது பூவில் தேன் குடிக்கும். இதன் இறக்கைகள் மிக வேகமாக அசைவதாலே இவை பாடுவது போலச் சத்தம் கேட்கின்றது.

2) பாம்பை அடிக்க இது உதவும். கோல்,மரத்துண்டு, வில், வயல்,இவையும் இதன் பொருளில் வரும்.

3) பூமியைப் புவி என்று சொல்வது போல இப்படியும் சொல்லலாம். (உலகம் இன்று குழம்பியுள்ளது போலவே இந்தச் சொல்லும் குழம்பியுள்ளது.)

7) சேவலின் தலையில் இது இருக்கும். (ஒரெழுத்துச் சொல்)

12) காலணி என்று சொல்வதை இப்படியும் சொல்லலாம். செருப்பு, சப்பாத்து இவை எல்லாம் இந்த இனத்தைச் சேர்ந்தவை.



படிப்பகம்

www.padippakam.com

13) நோயாளிக்கு இது செய்ய வேண்டும்.

23) காடு வெட்டி முதன் முதலாகச் செய்யும் பயிர்ச் செய்கையை இப்படி அழைப்பர். தானியங்களில் இதுவும் ஒன்று. (இந்தச் சொல் கீழிருந்து மேலாக உள்ளது)

29) கடல்,கண்ணன்,சிவனது கழுத்து எல்லாம் இதனுடன் தொடர்புடையவை. விசம் எந்த நிறமாக இருந்தாலும் உடம்பினுள் சென்றதும் இந்த நிறமாகவே மாறி விடுகின்றது.

32) ஒருவகைப் பழமரம். குதிரையையும் இது குறிக்கும். இதன் பொருளில் ஏராளமான சொற்கள் தமிழில் உண்டு. (ஒரெழுத்துச் சொல்)

38) சிறுவர் அமுதத்தில் இதுவே அதிகம் வரவேண்டும் என்றே நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள். (கீழிருந்து மேலாக உள்ளது)

42) ஆறாத புண்ணில் இது ஓடி விட்டதாகச் சொல்வார்கள். இதன் பொருள் ''படிந்து விட்டது'' என்பதாகும். புண்ணில் மட்டுமல்ல! எமது நாட்டின் இனப் பிரச்சினையிலுந்தான்.

சிறுவர்அமுதம் தொடர்பான சகல தொடர்புகளுக்கும்,

SINNA RAJESWARAN
Red..SIRUVAR AMUTHAM
IM WINKEL -2
W.5013 ELSDORF/Rhld



படிப்பகம்

www.padippakam.com

SIRUVAR **AMUTHAM** No 34

சிறுவர் அமுதம்

Tel..02271/66527

இலங்கை நாடு எம் நாடு
இனிய எங்கள் தாய் நாடு
அழகு மலைகள் நிறை நாடு
ஆறுகள் பாய்வது எம் நாடு
மழைவனம் உள்ளது எம் நாடு
நெல்லொடு தேயிலை தென்னை பனை
நிலையாய் ஓங்கும் எம் நாடே

---

தொடர்புகளுக்கு:
SIRUVAR AMUTHAM
IM WINKEL - 2,
5013 ELSDORF/RHLD
GERMANY

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark

**KINDERFREUNDLICHES MAGAZIN**

AM44

படிப்பகம்